රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/SD/1/1/19 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2018.10.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்,

**256 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையைத் திருத்துதல்**

நி.ஒ. 506 (ட) இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்குகளின் வருடாந்த இணக்கக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2017.07.05 ஆம் திகதிய 256 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பக்கம் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

அதன் அறிவுரைகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்ற 2018 ஆம் ஆண்டுக்கான இணக்கக் கூற்றுக்களை 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வுக்காக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதனை இத்தால் அறியத் தருகிறேன். அதன் பிரகாரம் இதற்குப் பின்னர் முற்பண ''பீ'' கணக்குகளின் வருடாந்த இணக்கக் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி குறித்த நிதியாண்டுக்குப் பின்னரான வருடத்தின் பெப்ரவரி 28 ஆம் திகதியாகும் என்பதை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

இந்தத் திருத்தமானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுப்பதன் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்: கே.டி.ஆர். ஒல்கா
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்: 1 கணக்காய்வாளர் நாயகம்

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka.
General - Tel.: +94 11 2484500/600 Ext.: 1149 Fax : +94 11 2484869 Website : www.sad.gov.lk
Director General - Tel.: +94 11 2484728 Fax : +94 11 2473856 e -mail : dgsa@sad.treasury.gov.lk